2. தகவல் கோரல்

(அ) கொளத்தூர் பிரதான சாலை, ஔவையார் நகர் மற்றும் ஐ.சி.எஃப். கெனால் சாலையை இணைக்கும் வகையில் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் பிரதான சாலை, ஔவையார் நகர் மற்றும் ICF Canal சாலையை இணைக்கக்கூடிய பகுதியில் போக்குவரத்து நெரிசல் காரணமாக அந்தப் பகுதி மக்கள் பலதரப்பட்ட இன்னல்களுக்கு தொடர்ந்து ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக அந்தத் தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் என்னிடத்தில் அதுகுறித்து தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில், 16–1–2015 அன்று, அப்போது மத்திய இரயில்வே துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சுரேஷ்பிரபு அவர்களுக்கு நான் கடிதம் அனுப்பி வைத்திருந்தேன். அதில், உடனடியாக அந்தப் பகுதியிலே ஒரு பாலத்தைக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்து வைத்திருந்தேன். அந்தக் கடிதத்தின் தொடர்ச்சியாக, 11–6–2015 அன்று, என்னுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காக 7 கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் திட்டமும் எடுத்துக்கொள்ளப்படுவதாக எனக்கு கடிதமும் வந்திருக்கிறது. இதே மாமன்றத்தில் நான்கு முறை இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசி, அவையினுடைய கவனத்திற்கும், இந்த அரசினுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வந்திருக்கிறேன். தற்போது இந்தப் பாலம் அமைப்பதற்குத் தேவையான நிலத்திலுள்ள 1,230 சதுர மீட்டர் மற்றும் அதனுடன் சேர்ந்த 800 சதுர மீட்டர் கொண்ட கட்டடத்தை இடிப்பதற்கு 10 கோடியே 75 இலட்சம் ரூபாயை ICF நிறுவனம் கோரியிருக்கிறது. தற்போது இரயில்வே துறைக்குச் சொந்தமான நிலத்தையும் பயன்படுத்துகிற காரணத்தால், 15 கோடியே 36 இலட்சம் ரூபாயை ICF நிறுவனம் கோரியுள்ளதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. எனவே, இந்தப் பணி வேகமாக நடைபெற

[திரு. மு.க. ஸ்டாலின்] [2020 மார்ச் 18

ICF நிறுவனத்தின் பொது மேலாளர் அவர்களைச் சந்திப்பதற்காக எங்களுடைய வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினரை அனுப்பி இதுகுறித்து நான் மீண்டும் நினைவுபடுத்தி, வலியுறுத்தி எடுத்துச் சொல்லச் சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 11–15

தெற்கு இரயில்வே பொது மேலாளர் அவர்களை எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித்து கடிதம் கொடுத்திருக்கிறார். அவர்கள் 30–5–2020–க்குள் இரயில்வே துறையைச் சார்ந்த அனைத்துப் பணிகளும் நிறைவுபெறும் என்று எனக்குப் பதில் கடிதமே அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; 10–9–2019 அன்று இந்தப் பணிக்குண்டான பணி ஆணையை சென்னை மாநகராட்சியும் வழங்கியிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், உடனடியாக ICF நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை அரசு செலுத்துவதா, அல்லது ஏற்கெனவே நிர்ணயித்த தொகையில் அந்தப் பணியை மேற்கொள்ள ICF அனுமதி பெற்றுள்ளதா, என்கிற அந்த முடிவை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அன்றாடம் பொது மக்களுக்கு நெரிசல் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய சங்கடங்களைக் களைவதற்கு, இந்தப் பாலத்தை ஆண்டிற்குள்ளாவது ஒரு போர்க்கால நடவடிக்கை எடுத்து, நிறைவேற்றித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று அமைச்சருடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய கோரிக்கை தொடர்பாக, வில்லிவாக்கம் தொகுதி, வில்லிவாக்கம், GKM Colony, பட்டேமடு இரயில் கடவுப்பாதை ஒன்றில் மேம்பாலம் அமைப்பதற்காக வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு, 58 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டில் பாலத்திற்குத் தேவையான தனியார் நிலத்தைக் கையகப்படுத்தவும் ICF நிறுவனத்தின் 1,830 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தை 35 வருட கால குத்தகைக்கு எடுக்கவும் தேவையான 34 கோடி ரூபாய் நிதியும் அடங்கும். இரயில்வே பகுதியில் இரயில்வே துறையின்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020 மார்ச் 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இத்திட்டத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதியாதாரம் மூலதன மானிய நிதிமூலம் பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணியாணை 10–9–2019 அன்று வழங்கப்பட்டது. இப்பாலம் அமைப்பதற்குத் தேவையான நிலத்தை ICF நிறுவனத்திடமிருந்து குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரே புள்ளிவிவரங்களையெல்லாம் குறிப்பிட்டார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் 10 கோடியே 75 இலட்சம் ரூபாயை ICF நிறுவனத்திற்குச் செலுத்துவதாக இருந்தது. பின்னர், சுற்றுச்சுவர் வெளிப்புறம் மற்றும் உள்ளே ICF–ன் நிலத்தையும் பயன்படுத்துவது போன்ற காரணத்தால், 15 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலுத்துமாறு ICF நிறுவனம் கேட்டுக்கொண்டது. இத்தொகையை ICF நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தனி அலுவலர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புகை கடிதமும் ICF நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைச் செலுத்த இரயில்வே வாரியம் மற்றும் ICF நிறுவனத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. கொளத்தூர் பிரதான சாலையில் ஆழ்துளை கடைக்கால்மீது பளுதாங்கும் சோதனை நடத்துவதற்கு ஏதுவாக ஆழ்துளை கடைக்கால் அமைக்கும் பணியும், ICF சாலை பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியும் தற்போது நடைபெற்று வருகிறது. இப்பாலப் பணி 18 மாத காலத்தில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இதற்கு முன்பும் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய கோரிக்கையை வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னதால், அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியவுடன், நான் மாநகராட்சி ஆணையாளரைக் கூப்பிட்டு, உடனடியாகப் பணிகள் வேகமாக நடக்க வேண்டுமென்று உத்தரவிட்டேன். அந்த அடிப்படையிலே இன்றைக்கு இரயில்வே துறையிலிருந்து அந்தக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது. கூடிய விரைவிலே வேகமாக அந்தப் பணி முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...